<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 107/2019**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரஸ்வதி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு நவம்பர் மாதம் 13ம் நாள் சாட்சியம்.

---

<u>**முதல் விசாரணை**</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 22.12.2010 தேதியிட்ட எனது சகோதரிகள் எனக்கு எழுதி வைத்த விடுதலை பத்திரத்தின் பதிவு நகல்.
2. 13.09.2013 தேதியிட்ட 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**வழக்குரையின் 3வது ஆவணம் குறைவான முத்திரை கட்டணம் செலுத்தப்பட்ட ஆவணமாக உள்ளதாலும், உரிய மதிப்புடையதாக இல்லாததாலும்**

**சார்பதிவாளருக்கு உரிய முத்திரை கட்டணம் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக அனுப்ப வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.13 18:21:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.